# தினசரி நடப்பு நிகழ்வுகள்

# 27 மற்றும் 28 பிப்ரவரி 2021

## தேசிய நிகழ்வுகள்

### பெரும்பாக்கத்தில் புதிய தபால் நிலையம்!!

- பெரும்பாக்கம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் தேவையை கருத்தில் கொண்டு, அங்கு புதிய துணை தபால் நிலையம் ஒன்றை மார்ச் 1 அன்று தபால் துறை திறக்க இருக்கிறது.
- பெரும்பாக்கம் பஞ்சாயத்து மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் சுமார் 71,000 மக்களுக்கு இந்த புதிய தபால் நிலையம் சேவையாற்றும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சென்னை மண்டல தலைமை தபால் அதிகாரி சுமதி ரவிச்சந்திரன், சென்னை மண்டலத்தின் தபால் சேவைகள் இயக்குநர் கே சோமசுந்தரத்தின் முன்னிலையில் பெரும்பாக்கம் தபால் நிலையத்தை திறந்து வைக்கிறார்.

### இந்தியாவின் சார்பாக ஆஸ்திரேலியா தூதர் நியமனம்!!

- நமது நாட்டிற்காக மெச்சிகோவில் தூதராக செயல்பட்டு வரும் மன்ப்ரீத் வொக்ரா தற்போது ஆஸ்திரேலியாவிற்குமான தூதராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஐஎப்எஸ் என்று கூறப்படும் இந்திய வெளியுறவுத்துறையில் இவர் கடந்த 1988 ஆம் ஆண்டு அதிகாரியாக இணைத்து பணிபுரிந்துள்ளார்.
- இவரை தற்போது ஆஸ்திரேலியாவிற்கான தூதராக நியமிக்க இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

### ஆர்டிக் கண்டத்தை கண்காணிக்க ரஷ்யா செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியுள்ளது!!

- ஆர்டிக் கண்டத்தில் நிலவும் சுற்றுசூழல் மாற்றத்தினை கண்காணிக்க என்று ரஷ்யா அரசின் விண்வெளித்துறை புதிதாக ஒரு செயற்கைக்கோளை விண்ணில் வெற்றிகரமாக செலுத்தியுள்ளது.

- கடந்த சில நாட்களுக்கு முன்பு சமூகவலைத்தளங்களில் ஆர்டிக் கண்டத்தில் ஒரு பனிப்பாறை உருகும் காட்சி வைரலாக பரவியது. இதனை அடுத்து ரஷ்யா அரசாங்கம் இந்த நடவடிக்கையினை எடுத்துள்ளது.
- கஜகஸ்தான் பகுதியில் உள்ள ஏவுதளத்தில் இருந்து இந்த செயற்கைகோள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.
- இந்த செயற்கைகோள் நேராக புவிவட்ட பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரஷ்யா பற்றி**

தலைநகரம் - மாஸ்கோ

அதிபர் – புதின்

## நியமனங்கள்

### பஞ்சாப் முதல்வரின் ஆலோசராக பிரஷாந்த் கிஷோர் என்பவர் நியமனம்!!

- பஞ்சாப் முதல்வர் அம்ரிந்தர் சிங்கின் முதன்மை ஆலோசகராக பிரபல அரசியல் வியூகர் பிரஷாந்த் கிஷோர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த பதவியில் இருப்பவருக்கு மாதம் 1 ரூபாயுடன் கூடிய கேபினட் அமைச்சர் அந்தஸ்து கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.



# விளையாட்டு நிகழ்வுகள்

### 2வது கேலோ இந்தியா தேசிய குளிர்கால விளையாட்டு போட்டியை பிரதமர் திறந்து வைத்தார்!!

- இரண்டாவது கேலோ இந்தியா தேசிய குளிர்கால விளையாட்டு நிகழ்ச்சியில், பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி காட்சி மூலம் துவக்கவுரையாற்றினார்.
- குளிர்கால விளையாட்டு போட்டியில், இந்தியா தீவிரமாக இருப்பதுடன், ஜம்மு காஷ்மீரை முக்கிய இடமாக மாற்றுவதில், இது முக்கியமான நடவடிக்கை என்று பிரதமர் நரேந்திர மோடி உரை நிகழ்த்தினார்.

### சர்வதேச மல்யுத்த போட்டியில் வினேஷ் போகத் தங்கம் வென்றார்!!

- சர்வதேச மல்யுத்த போட்டியில் 53 கிலோ எடை பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத் வெற்றி பெற்று தங்கம் வென்றார்.
- உக்ரைனில் நடந்த 3 கிலோ எடை பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத், 2017-ம் ஆண்டு உலக சாம்பியனான கலாட்ஜின்ஸ்காயுடன் (பெலாரஸ்) மோதினார்.
- வினேஷ் போகத் முடிவில் 10-8 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை சொந்தமாக்கினார். கொரோனா வைரஸ் பரவலால் கடந்த ஆண்டு மல்யுத்த போட்டிகள் அனைத்தும் நிறுத்தப்பட்ட நிலையில் அதன் பிறகு அவர் வென்ற முதல் பதக்கம் இதுவாகும்.

### சர்வதேச குத்துசண்டை போட்டியில் இந்திய வீரர் வெள்ளி வென்றார்!!

- சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்திய வீரர் தீபக் குமார் வெள்ளி வென்று இறுதி சுற்றிற்கு முன்னேறியுள்ளார்.
- பல்கெரியாவில் 72 வது சர்வதேச குத்துச்சண்டை போட்டி தொடர் நடைபெற்று வருகின்றது.
- இதில் ஆண்களுக்கான 72 கி.கி போட்டியில் தான் இந்திய வீரர் தீபக் வெள்ளி வென்றுள்ளார். அவர் இந்த போட்டியில் வென்றுள்ளதாக அவர் இறுதி சுற்றிருக்கும் செல்ல உள்ளார்.

# முக்கிய நாட்கள்

### அரிய நோய்கள் தினம் 2021!

- மக்களிடையே அரிய நோய்கள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பிப்ரவரி மாதம் 29-ந்தேதி அரிய நோய்கள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

- மக்களிடையே அரிய நோய்கள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பிப்ரவரி மாதம் 29-ந்தேதி அரிய நோய்கள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- ஏனென்றால், 4 ஆண்டுகளுக்கு ஒருமுறையே பிப்ரவரி 29-ந்தேதி வருவதால் அரிய நோய் தினத்துக்கு இந்நாள் தேர்வு செய்யப்பட்டது. இருப்பினும், மற்ற ஆண்டுகளில் பிப்ரவரி 28-ந்தேதி இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- உலக சுகாதார நிறுவனத்தின் படி 1000-ல் ஒருவருக்கு வந்தால், அது அரிய நோயாகும் என்று கணக்கிடப்படுகிறது.

## மரணங்கள்

### கம்யூனிஸ்டு கட்சி மூத்த தலைவர் தா.பாண்டியன் மரணம்!!

- உடல்நலக்குறைவு காரணமாக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன் மரணம் அடைந்தார். அவருடைய உடல் மதுரையில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.
- இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன் உடல் நலக்குறைவால் 27 ஆம் தேதி மரணம் அடைந்தார். அவருக்கு வயது 89.
- கடந்த 24-ந்தேதி சிறுநீரக கோளாறு பிரச்சினையால் அவருடைய உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.